இன்றைக்கு மறந்துவிட முடியாது. ஜெயப்பிரகாஷ் நாராயணன் அவர்களும், இராஜாஜி அவர்களும், காஷ்மீரத்தை இந்த நாட்டோடு இணைக்கிற நாட்களில் அவருக்கு ஆலோசனைகள் சொன்னார்கள். கடைசியாக, நமது மாநிலத்தைச் சேர்ந்த திரு. ஜி. பார்த்தசாரதி அவர்கள்தான் இந்திய அரசினுடைய தூதுவராகக் காஷ்மீரத்திற்குப் போய், கடைசியாக, அவருடைய எண்ணங்களைச் சிறிது மாற்றி, பல காரியங்களிலே இந்தியப் பேரரசோடு அவரை ஒத்துழைக்கச் செய்தார்கள் என்பதை என்றைக்கும் நான் நினைவுகூரக் கடமைப்பட்டிருக்கிறேன்.

(முற்பகல் 10-10)

வாழ்விலே அயராத கொள்கைப் பற்று கொண்ட ஒரு பெரிய சிங்கம் இன்றைக்கு நம்மை விட்டு மறைந்துவிட்டதாகவே நான் கருதுகின்றேன்.

இந்தியத் துணைக்கண்டம் முழுவதும் இன்றைக்கு அவருடைய மறைவுக்குத் தன்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொண்டிருக்கிறது. அதைப்போலவே இன்றைக்கு நானும் அவர்களோடு சேர்ந்து என்னுடைய இரங்கலை பரூக் அவர்களுக்குத் தெரிவித்துக் கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பரூக் அவர்கள் நாடாளுமன்றத்திலே மூன்றாண்டுகளாகப் பணியாற்றிக் கொண்டிருந்துவிட்டுத்தான் தற்போது காஷ்மீரத்துக்குப் போய் இன்றைக்குத் தற்காலிக முதல்வர் பொறுப்பையும் ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

அவர்களுக்கும், ஷேக் அப்துல்லாவினுடைய துணைவியார் அவர்களுக்கும், அவருடைய குடும்பத்தாருக்கும் என்னுடைய இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இந்த இரங்கல் தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு நிமிடங்கள் எழுந்து நிற்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

(உறுப்பினர்கள் அனைவரும் இரண்டு நிமிடங்கள் மௌனமாக எழுந்து நின்றதன் மூலம் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப் பெற்றது.)

3. அறிவிப்பு.

பேரவை அலுவல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இன்று பேரவையில் எடுத்துக் கொள்ளப் பெறுவதாக அறிவிக்கப்பட்டிருந்த 9-9-82 தேதியிட்ட நிகழ்ச்சி நிரலில் உள்ள நிகழ்ச்சிகள் நாளை 10-9-82 காலை எடுத்துக் கொள்ளப்படும். 10-9-82 அன்று எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும் என்று அலுவல் ஆய்வுக் குழுவில் தீர்மானித்த நிகழ்ச்சி நிரல் நாளை 10-9-82 பிற்பகல் 4 மணி முதல் எடுத்துக் கொள்ளப்பெறும் என்பதைப் பேரவைக்குத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்த தலைவருக்கு மரியாதை தெரிவிக்கும் வகையில் பேரவையின் நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் ஒத்திவைக்கப் படுகின்றன. பேரவை மீண்டும் நாளை (10–9–1982) காலை 9 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை காலை 10,11 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

4. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

90. சென்னையிலுள்ள புற்றுநோய் நல நிறுவனத்திற்குச் சொந்தமான TMP. 3382 ஆம் எண் ஸ்டான்டர்டு வண்டி மற்றும் TNO. 8749 ஆம் எண் சிறு பேருந்து இவற்றைப் பொறுத்த வரையில் சலுகை வித வரி செலுத்துவது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 18–5–1982 ஆம் தேதியிடப்பெற்ற 1218 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் (தமிழ் நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

91. சென்னையிலுள்ள கால்நடை நல வாரியத்திற்குச் சொந்தமான MSM 4369 ஆம் எண் நடமாடும் கால்நடை மருத்துவ வண்டியைப் பொறுத்தவரையில் செலுத்தத் தக்க வரி வீதத்தைக் குறைப்பது குறித்து உள் துறையின் (போக்குவரத்து-1) 14–5-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1177 ஆம் எண் அரசாணை யில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1974 ஆம் ஆண்டு மோட்டார் வண்டிகள் வரிவிதிப்புச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].

92. செங்கல்பட்டு மாவட்டம் உத்திரமேரூர் வட்டத்தில் உள்ள அருணாசலம் பிள்ளை சத்திரத்தைச் சேர்ந்த மல்லியன் கரணை குக்கிராமத்தை கிராமதான இயக்கக் கிராமமாக அறிவிப்பது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 24-6-1982 ஆம் தேதியிடப் பெற்ற 930 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் [தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது.]

93. திருச்சிராப்பள்ளி மாவட்டம் மணப்பாறை வட்டத்தில் சில கிராமங்களைக் கிராமதான இயக்கக் கிராமங்களாக அறிவிப்பது குறித்து ஊர்வளர்ச்சி—உள்ளாட்சித் துறையின் 11-7-1982 ஆம் தேதியிடப் பெற்ற 1051 ஆம் எண் அரசாணையில் வெளியான அறிவிப்பு [தமிழ்நாடு 1958 ஆம் ஆண்டு பூதான இயக்கச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 15/1958) 28 (4) பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப் பெற்றது].